Judicial Form No.53
(See Rule 42 )
**DEPOSITION OF WITNESS**
( Chapter XXIII Code of Cr.P.C )

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE, ARUPPUKOTTAI

| | | |
|---|---|---|
| Calendar | : | |
| Miscellaneous | : | |
| Preliminary Register | : | |
| Sessions | : | Sessions Case No.41/2020 |
| Deposition of Witness of PW | : | Prosecution – PW 18 |
| | | Defence |
| | | Court |

| | |
|---|---|
| Name | : சரவணக்குமார் |
| Father / Husband Name | : ராஜேந்திரன் |
| Village | : அருப்புக்கோட்டை |
| Taluk | : அருப்புக்கோட்டை |
| Caste | : |
| Calling | : கம்யூட்டர் சர்வீஸ் சென்டர் |
| Religion | : |
| Age | : 45 |

(2 மற்றும் 3 வது எதிரி ஆஜர். )

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1869 (Central Act 44 of 1969 ) on the 01.06.2026

**வழக்கு விசாரணையின் போது இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி, பதிவு எண் M.S.No.2563/2015 நீதிமன்றத்தில் இருந்தார். வழக்கறிஞர்**

**திரு.N.ஸ்ரீஹரி, பதிவு எண் M.S.No.1974/2021, வழக்கறிஞர் திருமதி.R.சரண்யா, பதிவு எண் M.S.No.2807/2012, வழக்கறிஞர் திரு.A.M.வடிவேல், பதிவு எண் M.S.No.2750/2010, வழக்கறிஞர் திருமதி. ஹேமலதா, பதிவு எண் M.S.No.93/2010, வழக்கறிஞர் திரு.M.திருக்குமரேசன், பதிவு எண் M.S.No.6376/2021 மற்றும் வழக்கறிஞர் திருமதி.S.ஹேமலட்சுமி, பதிவு எண் M.S.No.7418/2022 ஆகியோர் நீதிமன்றத்தில் இருந்தார்கள். எதிரிகளுக்கு இலவச சட்ட உதவி அளிக்கப்படும் என்று தெரிவித்தபோதும் அவர்களாகவே இந்த வழக்கை நடத்துவதாக கூறிவிட்டார்கள். ஆகையால், இலவச வழக்கறிஞர் திருமதி.P.காயத்ரி அவர்கள் முன்னிலையில் சாட்சியம் பதிவு செய்யப்பட்டது.**

**முதல் விசாரணை :-**

1. நான் அருப்புக்கோட்டையில் குடியிருந்து வருகிறேன். நான் அருப்புக்கோட்டையில் பஜார் பகுதியில் SMK Systems என்ற பெயரில் கம்யூட்டர், சிசிடிவி பராமரிப்பு மற்றும் விற்பனை செய்து வருகிறேன். கடந்த 06.02.2019 ம் தேதி அருப்புக்கோட்டை நகர் காவல்நிலைய ஆய்வாளர் எனக்கு ஒரு வேண்டுகோள் கடிதம் கொடுத்தார். அருப்புக்கோட்டையிலிருந்து விருதுநகர் செல்லும் சாலையில் அமைந்துள்ள ஆயிரங்கண் மாரியம்மன் கோவில் அருகே அமைந்துள்ள சாலியர் மகாஜன சங்கத்தில் நிறுவப்பட்டுள்ள சிசிடிவி, விநாயகர் கோவில் பின்புறம் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி, அருகே அமைந்துள்ள டீக்கடையில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவி மற்றும் மருந்தகத்தில் பொருத்தப்பட்டுள்ள சிசிடிவிகளில் 31.01.2019 அன்று காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை பதிவாகியுள்ள சிசிடிவி பதிவுகளை பதிவிறக்கம் செய்து தரக்கோரி கேட்டுக்கொண்டார்கள்.

2. அதன் பேரில் 06.02.2019 அன்று மேற்சொன்ன நான்கு இடங்களுக்கு சென்று அங்கிருந்த சர்வரில் 31.01.2019 அன்று காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரை பதிவாகியுள்ள சிசிடிவி

பதிவுகளை Toshiba Hard drive–ல் பதிவிறக்கம் செய்தேன். மேலும் நான் பதிவிறக்கம் செய்து கொடுத்த சிசிடிவி பதிவுகளுக்கு இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 65 பி–ன் கீழ் சான்றிதழ் வழங்கினேன். என்னிடம் காட்டப்படுவது தான் இந்திய சாட்சியச் சட்டம் பிரிவு 65 பி–ன் கீழ் நான் வழங்கிய சான்றிதழ் ஆகும். **அந்த சான்றிதழ் அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. சா.பொ.14 தான் நான் பதிவிறக்கம் செய்து கொடுத்த Toshiba Hard drive ஆகும். சா.பொ.14 Toshiba Hard drive–வை கம்யூட்டரில் போட்டுப்பார்த்து சாட்சி அதில் உள்ள வீடியோவை தான் போலீசாரிடம் தான் பதிவிறக்கம் செய்து கொடுத்தேன் என்று கூறுகிறார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**2ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

3. போலீசார் சம்பவத்திற்கு முதல் நாள் சிசிடிவி பதிவுகளை பார்வையிட்டு பதிவிறக்கம் செய்து தர சொல்லி என்னிடம் கேட்கவில்லை. போலீசார் என்னிடம் 31.01.2019 அன்று காலை 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணிவரை உள்ள பதிவுகளை மட்டும் தான் பதிவிறக்கம் செய்து தரச் சொல்லி கேட்டுக்கொண்டார்கள்.

**3ம் எதிரி தரப்பு குறுக்கு விசாரணை –**

2ம் எதிரி தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை தன் தரப்பு குறுக்கு விசாரணையாக ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொண்டார்.

என்னால் இத்திறந்த நீதிமன்றத்தில் எதிரி /எதிரிகளின் வழக்குரைஞர் முன்பு சாட்சி சொல்ல சொல்ல என்னால் சான்று மொழி எடுக்கப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சாட்சியால் சரி என்று ஒப்புக்கொண்ட பின்னர் கையொப்பம் பெறப்பட்டது என்றும் சான்றளிக்கிறேன்.

M VASANTHA KUMAR

Digitally signed by M VASANTHA KUMAR
Date: 2026.06.01 17:35:07 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி
அருப்புக்கோட்டை.